DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 3 / 2025**
**P.W. 15**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஒய். சுரேஷ்குமார் |
| Father's Name | : | திரு. ஏசையன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 57 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு முசிறி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது, 4.10.2024ம் தேதி தொட்டியம் காவல்நிலைய குற்ற எண். 257/2024 வழக்கினை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கைகள் எண்.48/SJ&HR/Tri/2024 நாள் 4.10.2024ன்படி எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கைகள் எண்.48/SJ&HR/Tri/2024 நாள் 4.10.2024 **அ.த.சா.ஆ.7.** ஆகும்.

அன்று மாலை 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகாமுனி, சண்முகராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தைக் குறிக்கக் கூடிய மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயாரித்தேன். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆகும்.

அன்று மாலை 20.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து பூ போட்ட கண்ணாடியாலான பேப்பர் வெயிட் ஒன்றினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினேன்.

Preview

அன்று சாட்சி கிருஷ்ணவேணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மறுநாள் 5.10.2024ம் தேதி சாட்சிகள் சண்முகராஜா, மகாமுனி, முருகன், வினோத், தனலெட்சுமி, ஜெகதீசன், ரேணுகா, முருகவேணி, சீதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி அன்று காலை 9.00 மணிக்கு ஆஜர் எதிரியை முசிறி கைக்காட்டி அருகே வைத்து காரணம் கூறி கைது செய்தேன். அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தனலெட்சுமி மற்றும் ஜெகதீசன் முன்னிலையில் பதிவு செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட தடய பொருளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

கடந்த 7.10.2024ம் தேதி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் கிருஷ்ணவேணி, சாட்சிகள் சீதா, ரேணுகா, முருகவேணி ஆகியோர்களின் சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்க கேட்டு, தொட்டியம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கொடுத்தேன்.

அன்றே இவ்வழக்கின் எதிரி தேவராஜுக்கு சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்க கேட்டு, ஸ்ரீரங்கம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கொடுத்தேன். இவ்வழக்கில் எதிரி பயன்படுத்திய செல்போன் அழைப்பு விவரங்கள் கேட்டு ஜியோ நிறுவனத்திற்கு வேண்டுகோள் கொடுத்தேன்.

கடந்த 19.10.2024 அன்று இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் கிருஷ்ணவேணி, சாட்சிகள் சீதா, ரேணுகா, முருகவேணி ஆகியோர்களின் சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்கிய தொட்டியம் வட்டாட்சியர் சேக்கிழார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே ஆஜர் எதிரிக்கு சாதி சான்று மெய்தன்மை சான்று வழங்கிய ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் தமிழ்செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 19.10.2024ம் தேதி தொட்டியம் முதல்நிலை காவலர் திரு.பாலு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

கடந்த 12.12.2024 அன்று செல்போன் அழைப்பு விவரங்களை வழங்கிய ரிலையன்ஸ் இன்போ ஜியோ நிறுவனத்தின் நோடல் அதிகாரி திரு.கைலாசம் என்பவரை விசாரித்து அழைப்பு விவரங்கள் மற்றும் பாரதிய சாட்சிய அதிநியம் பிரிவு 63(4)(c) கீழான சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய அலைபேசி அழைப்பு விவரங்கள் அடங்கிய அறிக்கை அ.த.சா.ஆ.9

ஆகும். அவர் வழங்கிய பாரதிய சாட்சிய அதிநியம் பிரிவு 63(4)(c) கீழான சான்று அ.த.சா.ஆ.10 ஆகும்.

கடந்த 13.12.2024 அன்று அலைபேசி அழைப்பு விவரங்கள் பெற்று வந்த தலைமை காவலர் ராஜேஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே விசாரணை முடித்து எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 கிருஷ்ணவேணி, அ.சா.4 முருகவேணி, அ.சா.5 ரேணுகா, அ.சா.6 சீதா ஆகியோர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.1 கிருஷ்ணவேணி சம்பவ காலத்தில் தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய குழு தலைவராக இருந்தார் என்று சொன்னால் சரி தான். ஒன்றிய குழு தலைவர் பொறுப்பில் இருக்கக்கூடிய நபர்களுக்கு காவல் ஆய்வாளரின் தொலைபேசி எண்கள் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தொட்டியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து தொட்டியம் காவல் நிலையம் சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்று சொன்னால் சரி தான். அந்த இடத்தை அடைவதற்கு சுமார் ஐந்து முதல் பத்து நிமிடங்களில் சென்று அடைய முடியும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் கண்ட புகார் மனுவானது 4வது நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். அந்தக் காலதாமதத்திற்கான காரணத்தை என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய இடம் ஒரு அரசு அலுவலகம் என்று சொன்னால் சரிதான். அரசு அலுவலர்கள் பணி நேரத்தில் இருப்பார்கள். பொது இருப்பார்கள் என்றால் எல்லா நேரமும் இருப்பார்கள் என்று கூற இயலாது. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படக்கூடிய நேரம் 15.30 மணி ஆகும். அது அலுவலக பணி நேரம் என்று சொன்னால் சரிதான். அதே அலுவலகத்தில் அ.சா.1கிருஷ்ணவேணியின் அறைக்கு எதிரியில் கொரானா தடுப்பு அறை மற்றும் காசாளர் அறை உள்ளது என்றால் சரிதான். அந்த அறைகளில் இருந்த நபர்களை நான் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் யாரும் சாட்சியம் அளிப்பதற்கு முன் வராத காரணத்தினால் விசாரிக்கவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி சத்திரியன் என்ற பத்திரிக்கையின் நிருபர் என்பதை காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1கிருஷ்ணவேணியின் அறைக்கு

உள்ளே துணைத் தலைவர் சத்தியமூர்த்தி என்பவருக்கும் இருக்கை உள்ளது என்றால் சரிதான். அந்த சத்தியமூர்த்தி நான் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அவரும் சாட்சியம் அளிப்பதற்கு முன்வரவில்லை. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கண்ட சாட்சிகள் அந்த இடத்திற்கு என்ன காரணத்திற்காக வந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் சொந்த வேலையாக அலுவலகத்திற்கு வந்ததாக கூறியிருக்கிறார்கள். அ.சா.7 மகாமுனி என்பவரும் அ.சா.11 சண்முகராஜா என்பவரும் அ.சா.1கிருஷ்ணவேணியின் கட்சியை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.4 முருகவேணி, அ.சா.5 ரேணுகா, மற்றும் அ.சா.6 சீதா ஆகியோர்கள் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள். கடந்த 1.10.2024 அன்று மாலை 5.30 மணிக்கு அ.சா.1கிருஷ்ணவேணி வாய் மொழியாக புகாரை தெரிவித்து விட்டார் என்று சொன்னால் அந்த விபரம் எனது விசாரணையில் தெரிய வரவில்லை. கடந்த 1.10.2024 அன்றே அ.சா.1கிருஷ்ணவேணி, அ.சா.4 முருகவேணி, அ.சா.5 ரேணுகா, மற்றும் அ.சா.6 சீதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துவிட்டேன் என்றும், அதன்பிறகு அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 1.10.2024 அன்றே கைப்பற்றுதல் மகஜரில் கண்டுள்ள பேப்பர் வெயிட்டை கைப்பற்றினேன் என்றால் சரியல்ல. கடந்த 1.10.2024 அன்றே பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1.10.2024 அன்று கொடுக்கப்பட்ட புகார் மனுவானது இந்த வழக்கில் மறைக்கப்பட்டு விட்டது என்றும் அது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் மறைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஒன்றிய குழு தலைவரின் அறை என்பது அவரது தனிப்பட்ட அறை என்றும் அனுமதி பெற்று தான் உள்ளே செல்ல முடியும் என்று சொன்னால் சரியல்ல. டிரைவர் வினோத் என்பவரும் மற்றும் முருகன் என்பவரும் அரை மணி நேரம் கழித்து தான் அந்த இடத்திற்கு வந்ததாக கூறியிருக்கிறார்கள் என்றும் அவர்கள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.6 சீதாவின் அந்தரங்க புகைப்படங்கள் இருப்பதாக அ.சா.5 ரேணுகாவிடம் அலைபேசியில் அனுப்பியதாக சொல்லும் நிலையில் அது தொடர்புடைய வாட்ஸ்அப் பதிவுகளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எதிரி அவற்றை அழித்துவிட்டதால் தாக்கல் செய்ய இயலவில்லை. எதிரி தடயப் பொருட்களை அழித்துவிட்டார் என்று குற்ற இறுதி அறிக்கையில் நான் குறிப்பிட்டு

சொல்லவில்லை. அது தொடர்பாக தனியாக குற்றச்சாட்டும் குறிப்பிடவில்லை. அ.சா.2 முருகன் அந்த அலுவலகத்தில் அன்றைய தினம் பணியில் இருந்தார் என்பதை காட்டுவதற்குரிய பணிப்பதிவேடு வருகை பதிவேடு ஆகியவற்றை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் பேப்பர் வெயிட் தவிர வேறு தடயம் எதையும் நான் கைப்பற்றவில்லை. அ.சா.3 வினோத்திற்கு அ.சா.5 ரேணுகா, மற்றும் அ.சா.4 முருகவேணி பற்றி தெரியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.5 ரேணுகா, மற்றும் அ.சா.6 சீதா 2.10.2024 அன்று என்னிடமோ அல்லது திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடமும் எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை என்றால் என்னிடம் எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படக்கூடிய நபர்களின் சாதி சான்றிதழ் மற்றும் எதிரியின் சாதி சான்றிதழ் மெய் தன்மை சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.11 சண்முகராஜா முன்னிலையில் பேப்பர் வெயிட் கைப்பற்றப்படவில்லை என்றும் அதற்கு முன்பாகவே நான் கைப்பற்றி இருந்தேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் அந்த அறையில் என்னென்ன பொருட்கள் இருக்கிறது என்பதையும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடந்த 24.01.2025 அன்று இறுதி அறிக்கையுடன் சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன விதத்தில் ஆவணங்கள் தயாரிக்கப்படவில்லை என்றால் சரி அல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை சொன்ன நாளில் சொன்ன விதத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரி தானாக முன்வந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கிருஷ்ணவேணி, அ.சா.4 முருகவேணி, அ.சா.5 ரேணுகா மற்றும் அ.சா.6 சீதா ஆகியோர்களை எதிரி அச்சுறுத்தி பணம் கேட்டு மிரட்டவில்லை என்றும் தவறான செய்தி மற்றும் ஆபாச புகைப்படங்களை வெளியிடுவதாக கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கிருஷ்ணவேணி சார்ந்துள்ள சமுதாயத்தைப் பற்றி எதிரி தவறாக பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீதான குற்றச்சாட்டை பொருத்தவரையில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யான புகாரின் அடிப்படையில் பொய்யாக குற்ற இறுதி

Arogya

அறிக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe Copy Ware